உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.583/2023

| | |
|---|---|
| பெயர் | : பஞ்சவர்ணம்(அ.சா.6) |
| தகப்பனார் பெயர் | : |
| கணவர் பெயர் | :குருசாமி |
| வயது | :59 |
| கிராமம் | :கோட்டநத்தம்பட்டி |
| வட்டம் | :மேலூர் |
| தொழில் | :வீட்டுக்குடித்தனம் |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

22.11.2024

முதல் விசாரணை:

நான் கோட்டநத்தம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும், அவர்கள் என் மருமகள் நதியாவின் சித்தியும், சித்தப்பாவும் ஆவார்கள். 20.12.2021 அன்று மதியம் 12-12.30 மணிக்குள்ளாக எனக்கு போன் வந்தது. பேசிய நபர் யாரென்று எனக்கு தெரியாது. என் மருமகள் மீது அவரது சித்தியும், சித்தப்பாவும் எண்ணெயை காய வைத்து ஊற்றியதாக தகவல் கொடுத்தார்கள். அப்போது நானும், என் மகன் சதீஷ்குமாரும் காரை எடுத்துக்கொண்டு, பூதமங்கலத்திற்கு சென்றோம். அங்கு சென்று பார்த்த போது ஆம்புலன்ஸ் வந்தது. என் மருமகள் நதியா மீது மாவை தடவி வைத்திருந்தார்கள். நானும், நதியாவின் அம்மா அமிர்தம், மற்றும் நதியாவும் ஆம்புலன்சில் ஏறி மேலூர், அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். நதியா வலி தாங்க முடியாமல் கதறினார். காவலர்கள் அங்கு வந்தார்கள்.

காவலர்கள் நதியாவை விசாரணை செய்தார்கள். நதியா வாக்குமூலம் காவலர்களிடம் கொடுக்க நானும், என் மகன் சதீஷ்குமாரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். சாட்சியிடம் அ.சா.ஆ.1 காட்டப்பட்டு அதில் உள்ள 2வது கையெழுத்து தன்னுடையது தான் என்று ஒப்புக்கொள்ளவே மேற்படி சான்றாவணம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என் மருமகளுக்கு வலது கை, முதுகு, நெற்றி, வலது தொடையிலும் காயங்கள் ஏற்பட்டிருந்தது. காவலர்கள் என்னையும் விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை : வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2024.11.22 18:10:06 +0530

Assistant Sessions Judge

Melur